**செய்தி வெளியீடு எண்: 1082** **நாள்: 09.12.2010**

## <u>தமிழ்நாடு கடல் மீனவர் மக்கள் தொகை கணக்கெடுப்பு</u>

தமிழ்நாடு கடல் மீனவர் மக்கள் தொகை கணக்கெடுப்பு மீன்துறை மூலம் 1978, 1986 மற்றும் 2000–ஆம் ஆண்டுகளில் எடுக்கப்பட்டது. தற்பொழுது, 2010–ஆம் ஆண்டு வரும் டிசம்பர் மாதம் 13–ஆம் தேதி முதல் 27–ஆம் தேதி வரை கடல் மீனவ மக்கள் தொகை கணக்கெடுப்பு தமிழ்நாட்டில் 591 கடல் மீனவ கிராமங்களிலும் எடுக்கப்படவுள்ளது. இக்கணக்கெடுப்பு நடத்துவதன் மூலம் வரும் ஆண்டுகளில் அம்மக்களின் வாழ்வாதாரத்தை பெருக்கிட திட்டங்கள் தீட்டி நடைமுறைப்படுத்த இயலும். இக்கணக்கெடுப்பில் மீனவ மக்களின் குடும்ப விவரங்கள் மற்றும் மீன்பிடிப்பு தொடர்பான விவரங்களும் சேகரிக்கப்படும். கடல் மீனவ மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்திட அடிப்படையான மீனவ மக்கள் தொகை கணக்கெடுப்பிற்கு மீனவ கிராம மக்கள் சரியான விவரங்கள் தந்து முழு ஒத்துழைப்பை நல்கிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**வெளியீடு:–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**